Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# தமிழகத்தில் களப்பிரர்கால இலக்கியங்களின் அடிப்படையில் இருண்ட காலமா, விடியலின் காலமா?

**முனைவர் M. திருமலைச்சாமி**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை, தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை.

**முன்னுரை:**

தமிழகத்தின் வரலாறு தெளிவாகவும் முழுமையாவும் இன்றளவும் சரியானதுதானா? என்ற ஐயப்பாடுகள் இல்லா வரலாற்றை எழுதப்படாமல் இருப்பது நமது குறையாகய இருந்தாலும் தற்போதைய சூழலில் புதிய தொல்லியல் தடயங்கள் கிடைத்து வருவதைப் பார்க்கும்போது விரைவில் தமிழகத்தின் முழுமையான தெளிவான சரியான வரலாறு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் அளவில் வரலாறு படைக்கப்படும் என்பதில் ஐயமேதுமில்லை. தமிழகத்தின் இருண்டகாலம் என்று ஆய்வாளர்களால் நம்பப்படும் களப்பிரர் காலம் இருண்ட காலமா? என்ற வினாவிற்கு விடை தேடும் கட்டுரையாக இவை அமையும் என நம்புகிறேன். ஒரு காலத்தில் களப்பிரர் தமிழகத்தை ஆண்டுவந்தனர் என்ற வராலாற்றுச் செய்தியே நெடுங்காலமாக மறைந்து கிடந்தது. வேள்விக்குடிச் செப்பேடு கிடைத்த பிறகே அவை நிரூபனமானது. ஆகவே புதிதாக கால ஆதாரங்கள் கிடைக்கும் வரை ஒவ்வொரு அரச மரபினரின் வரலாறும் இருண்டகாலமே ஆகும். தற்போது இந்த கட்டுரையில் களப்பிரர்கால இலக்கியங்கள் பற்றி விரிவாக காண்போம்.

தமிழகத்தில் கள்ப்பிரர் ஆட்சிக்காலமான பொ.ஆ.250 முதல் பொது ஆண்டு 575 வரையிலான காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கிய நூல்கள் எவைகள் என்ற முழுவிவரங்கள் கிடைக்காவிட்டாலும் நமக்குக் கிடைத்த நூல்களைப்பற்றி மட்டும் கூறியுள்ளோம். இலக்கிய நூல்களை சமண சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஏராளமான நூல்களை எழுதியுள்ளனர். அவற்றோடு அன்றைய சூழலில் எதிர்த்து சமயப் போட்டியில் ஈடுபட்ட சைவசமயத்தைச் சேர்ந்தவர்களும் அதிகமான இலக்கியங்களை படைத்துள்ளனர்.

**சமணர்கள் இயற்றிய இலக்கியங்கள்:**

களப்பிரர்களின் நூல்களை பற்றி பிற்கால அறிஞர்களும் தங்களது நூல்களில் தெரிவித்துள்ளனர். நரிவிருத்தம் என்பது ஒரு சமணர் எழுதிய நூலாகும், இந்நூல் பற்றி கி.பி.ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசு என்ற சைவ சமயகுரவர் தமது தேவாரத்தில் நரிவிருத்தம் என்ற நூலைப்பற்றி கூறுகிறார்.

***"எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது***
***உருவருக்க மாவது உணர்கிலர்***
***அரி அயற்கு அரியானை அயர்ந்துபோய்***
***நரிவிருத்தம் தாகுவர் நாடரே"*** - என்று குறிப்பிட்டுள்ளார்.

நாரிவரத்தம் என்றால் நரியின் வராலாறு என்று பொருள்படும். மேலும் விருத்தம் என்றால் விருத்தப்பாவால் பாடப்பெற்றது என்றும் கூறுவர். இந்நூலின் ஆசிரியர் திருத்தக்கத் தேவர் ஆவார். சோழ அரசக்குலத்தில் பிறந்து சமணத்துறவியானார். இவர் குருவிடம் நூல் செய்ய அதாவது சீவகச்சிந்தாமணி என்ற எழுத அனுமதி கேட்டார். சீவகனின் வரலாறு சிற்றின்பக் கூறுகள் நிறைந்தவை ஆகவே, முதலில் நிலையாமை பற்றி ஒரு நூல் செய்யச் சொன்னார். திருத்தக்கத் தேவரும் நரி விருத்தம் இயற்றினர். இந்த நூலை இயற்றியதை பார்த்துவிட்டு அனுமதியளித்தார். அதன்பிறகு சீவக சிநதாமணி காவியத்தை திருத்ததக்தேவர் இயற்றினார். நரிவிருத்தம் இன்றும் முழுமையாக உள்ளது கூடுதல் சிறப்பாகும்.

**திருத்தக்கத்தேவரின் சீவகசிந்தாமணி:**

நரிவிருத்தத்தை பாடிய திருத்தக்கத் தேவர் சீவக சந்தாமணி என்ற நூலை இயற்றினார். இந்நூலுக்கு மணநூல் என்றும் பெயருண்டு. சீவக குமாரனின் வரலாற்றை குறிப்பிடுகிறது. சீவகன்

சமண தீர்த்தங்கரர் மஹாவிரரின் சமகாலத்தவர் ஆவார். இந்நூல் சிலப்பதிகாரத்திற்கு அடுத்தபடியாக சிறந்த நூலாக பார்க்கப்படுகிறது. இந்நூல் புதிய விருத்தயாப்பினால் எழுதப்பெற்ற முதல் நூலாகும். இந்த நூல் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சமண சமயம் உயர்ந்த நிலையில் இருந்த காலமான கி.பி.5 அல்லது 6 ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டு இருக்க வேண்டும்.

**கிளி விருத்தம், எலி விருத்தம்:**

சைவ சமய மும்மூர்த்திகளில் ஒருவரான திருஞான சம்பந்தர் தனது தேவார பதிகத்தில் கி.பி.7ம் நூற்றாண்டில் எலி விருத்தம், கிளி விருத்தம் என்ற இரண்டு நூல்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

***"கூட்டினார் கிளியின் விருத்தம் உடைத்ததோர்***
***எலியின் தொழில், பாட்டு மெய்கொலிப் பக்கமே செலுத்தும்"*** - என்று பாடியுள்ளார்.

நரிவிருத்தம் போல இந்த இரு நூல்களும் சமண சமய நூல்களே ஆகும். இந்நூல் தற்போது இல்லை, அழித்து போயிருக்க வேண்டும். இந்நூல் செய்யுட்களில் கலித்துறைச் செய்யுட்களும் பயின்று வந்துள்ளன. என்பது தெரிகின்றது. இதனை வீரசோழியம் என்ற நூலில் உரையாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**விளக்கத்தார் கூத்து:**

இது ஒரு கூத்து நூல் ஆகும். இந்த நூலை இயற்றியவர் விளகக்த்தனார் என்னும் புலவர் ஆவார். இந்நூலும் பிற்காலத்தில் மறைந்துவிடார்.

***"அடுதிறல் ஒருவ நிற் பரவுதும், எங்கோன்***
***தொடுகழற் கொடும்பூன் பகட்டெழு மார்பிற்***
***கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்***
***ஒன்றுகடல் உலகம் முழுவதும்***
***ஒன்றுபு திகிரி யுருட்டுவே னெனவே"*** - இந்த பாடலில் அச்சுதன் என்னும் களப்பிரர் அரசனின் பெயர் இடம் பெற்றுள்ளது. இந்நூல் இவ்வரசனின் காலத்தில் இயற்றப்பட்டது என்பது தெரியவருகிறது. மேலும் இந்நூலைப்பற்றிய வரலாறு மறைந்த போன தமிழ் நூல்கள் என்ற நூலில் காணலாம்.

**பெருங்கதை:**

பெருங்கதை எனனும் நூல் களப்பிரர் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட நூலாகும். இந்நூலை இயற்றியவர் கொடுங்வேள் என்ற புலவர் ஆவார். இந்நூலுக்கு கொங்குவேள் மாக்கதை, மாக்கதை, உதயணன் கதை சுருக்கமாக கதை என்று இருந்தால் வழங்கப்பட்டு வந்துள்ளது. இந்நூலின் முதல் பகுதியும் இறுதிபகுதியும் கிடைக்கவில்லை. இடைப்பட்ட பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. கி.பி.8ம் நூற்றாண்டில் திருமங்கையாழ்வார் இந்த நூலினை படித்து இருக்கிறார் என்பதை அவரின் திருமடல் செய்யுளில் பெருங்கதையின் தலைவியாகிய வாசவத்தையைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். சமணர்கள் களப்பிரர்காலத்தில் எழுதிய நூல்கள் பற்றி பார்த்தோம். இதே போன்று பௌத்தர்களும் நூல்கள் இயற்றியுள்ளனர். அதனால் அவை முழுவதுமாக மறைந்து விட்டன.

**சைவ சமய இலக்கியங்கள்:**

களப்பிரர்காலத்தில் சமண சமய நூல்கள் அதிக அளவில் இயற்றப்பட்டதைப் போல சைவ சமயக் குரவர்களான திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் போன்றவர்களால் சைவ சமய நூல்கள் பல இயற்றப்ப பட்டன. அவைகளை இங்கே காண்போம். சைவர்களால் பக்கி இயக்கம் தொடங்கி சமண, பௌத்த சமய வளர்ச்சியை வெகுவாக தடுத்தனர். அகப் பொருளுக்குப் பேரின்பத் தொடர்பான கருத்தை கற்பித்து உயிர்களுக்கும் கடவுளுக்கும் தெய்வீகக் காதலை பொருத்தி அதை பக்தியுடன் இணைத்தனர். இந்த கொள்கைக்கு ஆதாராமாக ஒரு நூல் இயற்றப்பட்டது. அந்நூல் இறைவனால் இயற்றப்பட்டது என்றும் கூறுவர். இந்நூலை "இறையனார் அகப்பொருள்" என்றும் "களவியல்" என்றும் அழைக்கப்பட்டது. மேலும் இந்த நூல் வெளிவந்த அக்காலத்தில் இயற்றப்பட்ட சைவ சமய நூல்களைப் பற்றி பார்போம்.

**மூத்த திருப்பதிகங்கள்:**

திருவாலங்காட்டுச் சிவபெருமானைப் பற்றி பாடப்பட்டதால் திருவாலங்காட்டுர் மூத்த திருப்பதிகங்கள் என்றும் அழைக்கப்படும். இந்த பதிகங்களை பாடியவர் காரைக்கால் அம்மையார் என்னும் அடியார் பாடியுள்ளார்.

காரைக்கால் அம்மையார் 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவருடைய வரலாற்றை திருத்தொண்டர் புராணம், காரைக்கால் அம்மையார் சம்பந்தர் போன்றவற்றில் காணலாம். திருப்பதிகங்கள் திருநாவுக்கரசர் தேவாரம் என்றழைக்கப்பட்டது. முதன் முதலில் திருப்பதிகம் பாடியவர் காரைக்கால் அம்மையார் ஆவார். அதனாலேயே இவர் பாடிய பதிகங்களுக்கு மூத்த திருப்பதிகங்கள் என்று பெயராயிற்று. இவர் கி.பி.5 அல்லது 6-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதலாம்.

**திருவிரட்டை மணிமாலை:**

இந்நூலை இயற்றியவர் காரைக்கால் அம்மையாராவார். இவர் கட்டளைக் கலித்துறையும் வெண்பாவும் என இரண்டு செய்யுட்களாக பாடியுள்ளார். இந்நூல் அந்தாதியாக 20 செய்யுள்களாக பாடப்பட்டுள்ளது.

**அற்புத திருவந்தாதி:**

இதனை இயற்றியவர் காரைக்கால் அம்மையார் ஆவார். சிவபெருமான் மேல் பாடப்பட்ட அந்தாதிப் பாடலாகும். நேரிசை வெண்பாவினால் ஆன 101 செய்யுள்களைக் கொண்டது. இவை திருமுறையில் 11வது திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளது.

**கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி:**

இந்நூலை இயற்றியவர் நக்கீர தேவ நாயனார் ஆவார். இந்நூல் நேரிசை வெண்பாவினால் அந்தாதித் தொடையாகச் செய்யுள் இயற்றியள்ளனர். கயிலை மலையிலும், காளத்திமலையிலும் எழுந்தருளியுள்ள சிவபொருமான் மீது பாடப்பட்டதாகும். இவர்ட சங்க கால நக்கீரர் கிடையாது. களப்பிரர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு நக்கீரர் ஆவார்.

**திரு ஈங்கோய் மலை எழுபது:**

இந்நூலை இய்ற்றியவர் கபில தேவ நாயணார் ஆவார். ஈங்கோய் மலையில் குடிகொண்டிருக்கும் சிவ பெருமான் மீது பாடப்பட்ட 71 வெண்பாக்களைக் கொண்டதாகும்.

**திருவலஞ்சுழி மும்மணிக்கோவை:**

சிவபொருமான் மீது பாடப்பட்ட தோத்திர நூலாகும். இந்நூலும் நக்கீரத தேவநாயணாரால் பாடப்பட்டதாகும்.

**திருவெழு கூற்றிருக்கை:**

இந்நூலும் நக்கீர தேவநாயனாரால் இயற்றப்பட்டதாகும். அகவற்பாவில் இயற்றப்பட்ட 56 அடிகளைக் கொண்டதாகும். இந்த செய்யுள்களும் 11ஆம் திருமறையில் இடம்பெற்றுள்ளன. இந்த நூலும் களப்பிரர் காலத்தில் இயற்றப்பட்டவையாகும்.

**பொருந்தேவபாணி:**

ஆசிரியர்பாவால் ஆன 67 அடிகளைக் கொண்டாதாகும். இந்நூலை இயற்றியவரும் நக்கீர தேவ நாயனாரே.

**கோபப்பிரசாதம்:**

நக்கீரத தேவ நாராயனாரால் பாடப்பட்டது. அகவற்பாவால் ஆன நூல் சிவபெருமான் மேல் பாடப்பட்ட நூல். மேலும் நக்கீர தேவ நாயனார் ‘காரெட்டு’ போற்றி கலிவெண்பா, திரு.கண்ணப்பத்தேவர் திருமறம் போன்ற செய்யுள்களையும் இயற்றியுள்ளார். மூத்த நாயனார் இரட்டை மணிமாலை:

இந்த நூலை இயற்றியவர் கபில தேவ நாயனார் ஆவார். இந்நூல் மூத்தநாயனார் என்ற ஆணை முகன்மீது பாடப்பட்ட வெண்பாவாகும். இருபது செய்யுள்களை உடையது. இது ஒரு அந்தாதி

நூலாகும். மேலும் கபிலதேவ நாயனார் சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை என்ற தோத்திர நூலையும் இயற்றியுள்ளார். மேலும் சிவ பெருமான் திருவந்தாதி என்ற தோத்திர நூலினையும் இயற்றியுள்ளார்.

**சிவபெருமான் திருவந்தாதி:**

பரணதேவ நாயனார் என்பவரால் இயற்றப்பட்டது. இந்த நூல் சிவபெருமான் திருவந்தாதி என்ற நூல் வெண்பாக்களால் ஆன அருந்ததி தொடையாகக் பாடப்பட்டுள்ளது. இந்நூல் திருமுறைகளில் 11வதாக இடம்பெற்றுள்ளது. இந்த நூலை இயற்றிய பரணர் சங்ககாலத்தைச் சேர்ந்தவர் அல்ல. இவர் களப்பிரர் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார்.

**கீழ்க்காணக்கு நூல்கள்:**

களப்பிரர் காலத்தில் இயற்றப்பட்ட சைவ சமய நூல்களையும் சமண சமய நூல்களைப் பற்றியும் விரிவாக கண்டோம். மேலும் களப்பிரர் காலத்தில் வேறு சில நூல்களும் உள்ளன. அவைகள் கீழ்க்கணக்கு நூல்களாகும். இதனை 18 நூல்களாக பிற்காலத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நூல்கள் காலத்தால் முற்பட்டவையும் பிற்பட்டவையும் உள்ளன. இவைகளில் பெரும்பாலான நூல்கள் களப்பிரர்கள் கால நூல்களாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாவன: நாலடியார், நான்தமணிக்கடிகை, இன்னா 40, இனியவை 40, கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணை மாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, முப்பால், திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை போன்றவைகளாகும். இவற்றில் திருக்குறள் (முப்பால்), களவழி நாற்பது, முதுமொழிக் காஞ்சி போன்றவை காலத்தால் முற்பட்டவை. நாலடியார் கி.பி.7-ம் நூற்றாண்டில் எழுதப்பட்தாகும். மற்ற பிற நூல்கள்யாவும் களப்பிரரிள் ஆட்சிக்கால்த்தில் எழுதப்பட்டதாகும்.

**முடிவுரை:**

தமிழகத்தில் களப்பிரர்களின் ஆட்சிக்காலத்தை இருண்ட காலம் என்றும் அக்கால சூழலில் எந்தவித வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் ஒரு கால் நூற்றாண்டு காலம் இருள் சூழ்ந்திருந்தது என்றும் குறிப்பிட்டு .இருந்தனர். ஆனால் தற்போது தற்கால ஆய்வாளர்கள் தங்களது ஆய்வின் மூலமாக பல இலக்கியம் தொகுப்புகள் மூலம் களப்பிரர்களை இருளில் இருந்து மீட்டுவிட்டனர் என்றே கூறவேண்டும். குறிப்பாக மயிலை சீனி வேங்கடசாமி போன்றோர் தங்களின் நூல்களில் களப்பிரர்களை விடியல் காலத்தை சேர்ந்தவர்கள் என்று நிரூபித்துள்ளனர். மேலும் இக்கட்டுரையில் களப்பிரர்கள் கால இலக்கியங்கள் மூலம் தமிழகத்தில் இருண்ட காலம் என்று கூறப்பட்ட களப்பிரர் காலம் இருண்ட காலம் அல்ல என்று கூறும் அளவிற்கு இலக்கியங்கள் அறிவின் மூலமும், கலையின்மூலமும்,படைப்பின் மூலமும் வரலாற்றை பிரதிபலிக்கும் விதத்திலும் இருண்டகால மல்ல விடியலின் காலம் தான் என்று மேற்கூறிய இலக்கியங்கள் நிரூபித்துள்ளது.

**நூல்பட்டியல்:**


1. மயிலை சீனி வேங்கடசாமி களப்பிரா ஆட்சியில் தமிழகம், மக்கள் வெளியீடு, சென்னை 1976, பக்க.92-97.
2. திருநாவுக்கரசரின் தேவாரம், ஆதிபுராணத் திருக் குறுந்தொகை -7
3. திருவாகசம் -5
4. சீவக சிந்தாமணி சொற்பொழிவு நினைவு மலர் 1952, பக்க.217,
5. திருமங்கை ஆழ்வார், சிறுத்திருமல்.
6. மணிமேகலை -15
7. வித்துவான் வே.வேங்கடராஜீலு, ரெட்டியார், கபிலர் 1936. பக்கம் -45
8. பி.டி. ஸ்ரீநிவாச ஐயங்கார், தமிழக வரலாறு.